**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**ஆணை நாள்: 12.09.2019 ((முற்பகல்)**

**முன்னிலை**
**திரு ச.செல்வராஜ், எம்.ஏ., பி.எட்.,**
**மாநில தகவல் ஆணையர்**
•••••••••

**வழக்கு எண்.SA 1996/E/2017**

திரு N.சந்திரன் ... மேல்முறையீட்டாளர்

Vs.

பொதுத் தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
குளித்தலை வட்டம்,
கரூர் மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 31.10.2016 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 05.12.2016 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 11.03.2017 |

******

**ஆணை**

இன்று (12.09.2019) முற்பகலில் இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் திரு N.சந்திரன் ஆஜராகவில்லை. மேல்முறையீட்டாளர் 12.09.2019 தேதியிட்ட கடிதம் வாயிலாக விசாரணைக்கு ஆஜராக இயலவில்லையென்று தெரிவித்துள்ளார். இதனை ஆணையம் பதிவு செய்கின்றது. பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர், திருமதி இரா.இந்துமதி, தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், குளித்தலை வட்டம், கரூர் மாவட்டம் ஆஜரானார்.

2. மேல்முறையீட்டாளர் 31.10.2016 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் மகாமுனி என்பவர் ஒரே தாலுக்காவைச் சேர்ந்தவராவாரென்று தெரிவித்து, அவர் அதே தாலுக்காவில் பணியாற்றலாமா, தேர்தல் பிரிவு துணை வட்டாட்சியராகப் பணிபுரிந்த அவர் தன் அதிகார துஷ்பிரயோகம் செய்து வாரிசுச் சான்றிதழ் வாங்கிக் கொடுத்துள்ளதற்கு அவர் மீது எத்தகைய நடவடிக்கை எடுக்கப்படும், 14.07.2005 அன்று பெரியசாமி, த/பெ. பழனியாண்டி என்பவருக்கு வழங்கிய வாரிசுச் சான்றிதழ் குறித்த கோப்பின் உண்மை நகல், அவர் குளித்தலை வட்ட வழங்கல் அலுவலராகப் பணிபுரிந்த காலத்தில் 01.04.2015 முதல் 28.09.2015 வரை வழங்கிய 29 பேர்களின் பெயர், முழு முகவரி, மேற்படி காலத்தில் எத்தனை புதிய குடும்ப அட்டை வழங்கப்பட்டுள்ளது, பதிவு செய்யப்பட்ட முழுக் கோப்பின் நகல், 26.08.2016 அன்று கிராம நிர்வாக அலுவலர் விசாரணைக்கு வந்துள்ளாரா, மருதூர் தெற்கு II கிராம நிர்வாக அலுவலர் விசாரணையின்போது கொடுத்த வாக்குமூல நகல், வைகநல்லூர் தெற்கு பட்டா எண்.985, சர்வே எண்.325/18D சம்பந்தமாக விசாரணையில் எடுக்கப்பட்ட முடிவு, எந்த நபர் பெயரிலிருந்து யார் பெயருக்குப் பட்டா வழங்க அனுமதி வழங்கிய அலுவலர் பெயர், மகாமுனி மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை, படிக்காத போலி டாக்டர் மோகன் என்பவர் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை, தன்னால் கோரப்பட்ட அடங்கல் ஆறு மாதத்திற்குப் பிறகு வழங்கிய பசலியில் உள்ள நோக்கம், அதற்காக மகாமுனி மீது இலாகாப்பூல்வமாக எடுக்கப்பட்ட நடவடிக்கை என 11 இனங்களில் தகவல் கோரி, பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலகம், கரூர் என விலாசமிட்டுத் தாக்கல் செய்துள்ளார்.

3. மேல்முறையீட்டாளருக்கு 21.12.2016 தேதியிட்ட கடிதம் வாயிலாகப் பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்பட்டுள்ளது. பொதுத் தகவல் அலுவலரால் முழுமையான தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்க ஆணையிடுமாறும், தவறான தகவலை வழங்கிய பொதுத் தகவல் அலுவலர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 05.12.2016 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர், மாவட்ட வருவாய் அலுவலர், கரூர் அவர்களுக்கும், 11.03.2017 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கும் தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (12.09.2019) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளருக்கு ஏற்கெனவே 21.12.2016 தேதியிட்ட கடிதம் வாயிலாகத் தகவல் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து உரிய ஆவணங்களை ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்தார். இதனை ஆணையம் பதிவு செய்கின்றது.

5. பொதுத் தகவல் அலுவலரால் மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்பட்டுள்ள தகவலை ஆணையம் ஏற்கவில்லை. எனவே விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட உத்திரவு பிறப்பிக்கப்படுகின்றது:

1. **மேல்முறையீட்டாளர் 31.10.2016 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள தகவலைச் சம்பந்தப்பட்ட பொதுத் தகவல் அலுவலருடன் இணைந்து, இனம்வாரியாக,**

முறையாக மற்றும் முழுமையாக இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 7(6)-ன்கீழ் கட்டணம் ஏதுமின்றி ஒப்புகை அட்டையுடன்கூடிய பதிவஞ்சலில் மேல்முறையீட்டாளருக்கு அனுப்பி, அதனை அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 30 தினங்களுக்குள் ஆணையத்திற்குச் சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்படுகின்றது.

2. மேல்முறையீட்டாளர் 12.09.2019 தேதியிட்ட கடிதம் வாயிலாக விசாரணைக்கு ஆஜராக இயலவில்லையென்றும், விசாரணையை வேறு தேதிக்கு மாற்றி வைக்குமாறும் கோரியுள்ளதை ஆணையம் ஏற்று, இவ்வழக்கின் விசாரணை பிறிதொரு தேதிக்கு மாற்றி வைக்கப்படுகின்றது. விசாரணை நடைபெறும் நாளும், நேரமும் பின்னர் தெரிவிக்கப்படும்.

ஒம்/- ச.செல்வராஜ்
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

<u>வழக்கு எண்.SA 1996/E/2017</u>

பெறுநர்

<u>பொது அதிகார அமைப்பு</u>

பொதுத் தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
குளித்தலை வட்டம்,
கரூர் மாவட்டம்.

<u>மனுதாரர்</u>

திரு N.சந்திரன்,
த/பெ. நல்லி,
குப்புரெட்டிப்பட்டி,
இனுங்கூர்,
குளித்தலை வட்டம்,
கரூர் மாவட்டம்.

Copy to: Judgement File.
16/09/19